பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

23 07 2026 THURSDAY 6.30 PM

## தலைப்புச் செய்திகள்

1) நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்தில் விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் அறிவிப்பு வரவேற்கத்தக்கது என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2) நாட்டின் கல்வி முறையை வலுப்படுத்தவும், இளைஞர்களின் நலன் காக்கவும் அரசு முன்னுரிமை அடிப்படையில் செயல்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3) தூத்துக்குடி காவல் நிலையத்தில் விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்ட இளைஞர் உயிரிழந்த சம்பவத்திற்கு திமுக, பிஜேபி உள்ளிட்ட கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

4) தமிழகத்தில் அடுத்த மூன்று நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5) ஜிம்பாப்வே அணிக்கு எதிரான முதலாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 126 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்தில் விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் அறிவிப்பு வரவேற்கத்தக்கது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், விரைவு விரைவு நீதிமன்றங்கள் மூலம் வினாத்தாள் கசிவில் தொடர்புடையவர்கள் மீதான

வழக்குகளுக்கு விரைவில் தீர்வுகாணப்பட்டு, நீதி கிடைக்கும் என்றும் கூறியுள்ளார். கூறியுள்ளார்.

இளைஞர்களின் எதிர்காலம் மற்றும் அவர்களின் பிரகாசமான வாழ்க்கைக்கு உயர் முன்னுரிமை அளித்து மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இளைஞர்களின் எதிர்காலத்தை பாதிக்கும் வகையில் வினாத்தாள் கசிவில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக பிரதமர் எடுத்துள்ள இந்த முடிவு ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும் என்றும் திரு அமித் ஷா தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு நாட்டின் கல்வி முறையை வலுப்படுத்தவும், இளைஞர்களின் நலன் காக்கவும் முன்னுரிமை அடிப்படையில் செயல்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

நீட் தேர்வு வினாத்தாள் கசிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவு நீதிமன்றங்கள் மூலம் நீதி கிடைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பிரதமரின் அறிவிப்பு, தேர்வுகள் நேர்மையான முறையில் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

வினாத்தாள் கசிவு விவகாரத்தில் தொடர்புடையவர்களில் ஒருவர் கூட சட்டத்தின் பார்வையிலிருந்து தப்ப முடியாது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

அடுத்த ஆண்டு முதல் நடைபெறும் தேர்வுகள் அனைத்தும் ஆன்லைன் மூலமாக நடைபெறுவதால், எதிர்காலத்தில் தேர்வில் எந்தவொரு குளறுபடியும் இருக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இதனை அரசியலாக்குவது தேசத்தின் பாதுகாப்புக்கு உகந்தது அல்ல என்றும் திரு நயினார் நாகேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்கள் போராட்ட விவகாரத்தில் காங்கிரஸ் கட்சியின் தூண்டுதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று சென்னையில் மாநில பிஜேபி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதனிடையே, நீட் வினாத்தாள் கசிவு குறித்து விசாரிக்க விரைவு நீதிமன்றம் அமைப்பது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள அறிவிப்பு வரவேற்புக்குரியது என்று சேலம் மாவட்டத்தை சேர்ந்த மாணவி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தூத்துக்குடியில் விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்ட அருணாச்சலம் என்ற இளைஞர் காவல் நிலையத்தில் உயிரிழந்த சம்பவத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், காவல்துறைக்கு பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு விஜய், காவல் மரணங்களுக்கு உறுதியான நடவடிக்கைகள் எடுக்காமல், மௌனம் காப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

மகனை இழந்து தவிக்கும் அருணாச்சலத்தின் குடும்பத்திற்கு முதலமைச்சர் உரிய பதிலளிக்க வேண்டும் என்றும் திரு உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

தூத்துக்குடி காவல் நிலையத்தில் இளைஞர் உயிரிழந்த சம்பவத்திற்கு பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரனும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாகர்கோவிலில் மாற்றுத்திறனாளி இளைஞர் சபரிவர்மன் காவல் நிலையத்தில் உயிரிழந்த சம்பவத்தின் அதிர்ச்சி அடங்குவதற்குள் மீண்டும் ஒரு காவல் மரணம் நிகழ்ந்திருப்பது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார்.

இளைஞர் அருணாச்சலத்தின் மரணத்திற்கு பொறுப்பான காவல்துறை அதிகாரிகளை உடனடியாக கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்,

அவரின் குடும்பத்தினருக்கு நீதியையும், இழப்பீட்டையும் விரைந்து வழங்க முதலமைச்சர் திரு விஜய் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

திருச்சி அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த 68 வயது பெண்ணின் கால் விரலை எலிகள் கடித்து குதறிய செய்தி அதிர்ச்சி அளிப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிப்பதுடன், அவருக்கு இழப்பீடு வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே, இன்று சென்னையில் இதுகுறித்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளித்த மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ், மருத்துவமனைகளில் சுகாதார கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் அடுத்த மூன்று நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

பத்திரப் பதிவுக்கான வருகையில்லா ஆவணப் பதிவு குறித்து கட்டட விற்பனையாளர்கள் மற்றும் வங்கியாளர்களின் சந்தேகங்கள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம், அத்துறைக்கான அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்செல்வன் தலைமையில், சென்னையில் இன்று நடைபெற்றது.

----------------------

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில், தேர்வான 111 பேருக்கு வேலைவாய்ப்புத்துறை துணை இயக்குநர் திரு செந்தில்குமார் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

---------------------

விழுப்புரத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கான சிறப்பு முகாமை நகராட்சி ஆணையர் சியாமளா இன்று தொடங்கிவைத்தார்.

-------------------

தேனி மாவட்டத்தில் தற்காலிக தூய்மைப்பணியாளர்களை புதிய உறுப்பினர்களாக பதிவு செய்யும் சிறப்பு முகாம்கள் நாளை மறுநாள் முதல் அடுத்த மாதம் 16-ஆம் தேதி வரை நடைபெற உள்ளதாக ஆட்சியர் திரு.வைத்திநாதன் தெரிவித்துள்ளார்.

-----------------

சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் நீர்வளத்துறையின் திருச்சி மண்டல தலைமை பொறியாளர் ஜெயக்குமார் இன்று ஆய்வு நடத்தினார்.

---------------

ராணிப்பேட்டை மாவட்டம் அம்மூர் ரயில் நிலையத்தில் போதைப்பொருள் கடத்தி வந்த நான்கு பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

-------------

தருமபுரி மாவட்ட காவல்துறை சார்பில், தலைக்கவசம் அணிய வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

---------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஜிம்பாப்வே அணிக்கு எதிரான முதலாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 126 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஹராரேயில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்த ஜிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 125 ரன் எடுத்தது.

-------------

கனடாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சாகேத் மைனேனி – இங்கிலாந்தின் Liam Broady இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 4-6, 7-6, 10-6 என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் சார்லஸ் – Ben Jones -இணையை வென்றது.

--------------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் – உருகுவேயின் Ariel Behar- இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

----------

ஆசிய இளையோர் ஐவர் ஹாக்கிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா - கஜகஸ்தானை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

இரவு மணி 9.30-க்கு நடைபெறவுள்ள ஆடவர் பிரிவில் இந்தியா - பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

<<<<<END>>>>>